பக்கங்கள்:-15

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 07 | ஞாயிற்றுக்கிழமை | 24.09.2023 | அதிர்வு 54

## வர்த்தகர் ஒருவர் சுட்டுக் கொலை!

வர்த்தகர் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் காலியில் நேற்று இடம்பெற்றுள்ளது. 06

### மனிதப் படுகொலைக் குற்றவாளிகளான

# கோட்டா – பிள்ளையானை தூக்கில் ஏற்ற வேண்டும்!

## அவர்களைப் பாதுகாக்க முயலாதீர் என்று ரணிலிடம் சஜித் வலியுறுத்து



- சுடர் திலீபன் -

“முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், இந்நாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தனும் (பிள்ளையான்) மாபெரும் மனிதப் படுகொலைக் குற்றவாளிகள். அவர்கள் இருவரையும் தூக்கிலிட வேண்டும். அதைவிடுத்து அவர்களைப் பாதுகாக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கக்கூடாது.” 04





## குற்றவாளிகளைப் பாதுகாக்க ரணில் முயற்சிக்கவே மாட்டார்

### இப்படி உறுதியளிக்கின்றது ஐ.தே.க.

– சுடர் திலீபன் –

“ஈஸ்டர் தாக்குதல் குற்றவாளிகளைப் பாதுகாக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒருபோதும் முயற்சிக்கமாட்டார். எதிர்க்கட்சியினர் இந்த விடயத்தில் சந்தேகப்படத் தேவையில்லை.” 02

## சு.கவை அரசுடன் முழுமையாக இணைக்கத் தீவிர நடவடிக்கை



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை முழுமையாக அரசுடன் இணைப்பதற்கான நடவடிக்கை திரைமறைவில் இடம்பெற்று வருகின்றது எனத் தெற்கு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தயாசிறி ஜயசேகரவை சு.கவின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து நீக்கியத்தைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது:-

அரசில் இணைந்து செயற்படுகின்ற சு.க. உறுப்பினர்களே சு.கவை முழுமையாக அரசுடன் இணைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

சு.க. அரசில் இணைவதற்குத் 02

## திலீபன் நினைவேந்தல் நிகழ்வு இரத்தக்களரியை ஏற்படுத்துமாம்

### தமிழ் அரசியல்வாதிகளை மிரட்டுகிறார் சரத் வீரசேகர



– சுடர் திலீபன் –

“திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகள் நாட்டில் மீண்டும் இன மோதலுக்கு வழி வகுத்து இரத்தக்களரியை ஏற்படுத்தும். தடை செய்யப்பட்ட விடுதலைப்புலிகளை நினைவேந்தும் இப்படியான 02




நாங்கள் பெரும்பாலும் பல சமயங்களில் ‘குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டி’க் கொண்டிருக்கிறோம். நமது சிந்தனை கூட அப்படித்தான். குறுகிய வட்டத்துக்குள்ளேயே நிற்கிறது.

ஏதோ எங்கள் நடவடிக்கைகளை உள்நாட்டில், உள்ளூர் புலனாய்வாளர்கள், உளவாளிகள் மோப்பம் பிடிக்க முயல்வர், அவர்களுக்குப் போக்கு காட்டினால் போதும் என்று கருதி பலரும் 02

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

## திலீபன் நினைவேந்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நிகழ்வுகளை தமிழ் அரசியல்வாதிகள் உடனடியாக நிறுத்த வேண்டும்.”

– இப்படி மிரட்டல் தொனியில் கருத்து வெளியிட்டுள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் கடற்படைத் தளபதியுமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வடக்கில் திலீபனை நினைவேந்தும் நிகழ்வுகளுக்குத் தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி மாவட்ட நீதிமன்றங்களில் பொலிஸார் மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர். எனினும், வடக்கில் உள்ள மாவட்ட நீதிமன்றங்கள் அந்த மனுக்களைத் தள்ளுபடி செய்து திலீபன் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கியுள்ளன. வடக்கு நீதிமன்றங்கள் இப்படியான கட்டளைகளைத்தான் வழங்கும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். எனினும், பொலிஸார் தமது கடமைகளை உரிய வகையில் செய்து வருகின்றனர்.

வடக்கிலும், கிழக்கிலும் பொலிஸாருக்குச் சவால் விடும் வகையில் தமிழ் அரசியல்வாதிகள் செயற்பட்டு வருகின்றனர். அவர்களைத் திருத்தவே முடியாது. திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகள் நாட்டில் மீண்டும் இன மோதலுக்கு வழிவகுத்து இரத்தக்களரியை ஏற்படுத்தும் என்பதைத் தமிழ் அரசியல்வாதிகளிடம் தெரிவித்துக்கொள்கின்றேன். தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளை நினைவேந்தும் இப்படியான நிகழ்வுகளை தமிழ் அரசியல்வாதிகள் உடனடியாக நிறுத்த வேண்டும்.” – என்றார்.

## குற்றவாளிகளைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

‘உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இடமளிக்க வேண்டும். அதைவிடுத்துத் தூக்கிலிடப்பட வேண்டிய மாபெரும் மனிதப் படுகொலைக் குற்றவாளிகளான கோட்டாபயவையும், பிள்ளையானையும் பாதுகாக்க ஜனாதிபதி முயற்சிக்கக் கூடாது’ – என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ள கருத்துக்குப் பதிலளிக்கும்போதே வஜிர அபேவர்த்தன எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சனல் 4 முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து உள்ளக சுயாதீன விசாரணைகள் இடம்பெறும் என்றும், ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகள் தப்ப முடியாது என்றும் ஜனாதிபதி எம்மிடம் தெரிவித்துள்ளார். எனவே, இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவும், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவும் சுயாதீன விசாரணைகளை நடத்தி அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும். தேவையேற்படின் சர்வதேச விசாரணையை நாட முடியும்.” – என்றார்.

## சு.கவவை அரசுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தயாசிறி முழுமையாகத் தடையாக இருந்தமையாலேயே அவர் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார் என்று சு.க.. வட்டாரம் கூறுகின்றது.

அரசில் இணைந்துள்ள சு.க. உறுப்பினர்கள் மீண்டும் சு.கவில் இணைவதாக இருந்தால் அரசில் இருந்து விலகி வர வேண்டும் என்று நிபந்தனை விதித்திருந்தார் தயாசிறி. அவர்களோ முழு சு.கவையும் அரசுடன் இணைக்கும் முயற்சியில் இருக்கும்போது அரசை விட்டு எப்படி விலகுவர்? மைத்திரிபால ஆரம்பத்தில் தயாசிறியின் மேற்படி நிலைப்பாட்டில்தான் இருந்தார். பின்னர் மாறிவிட்டார். அதற்குக் காரணம் அரசுடன் உள்ள சு.க. உறுப்பினர்கள் மைத்திரியைச் சந்தித்து மேற்கொண்ட மூளைச்சலவைதான் என்று சொல்லப்படுகின்றது.

அவர்களின் அழுத்தம் காரணமாகவே தயாசிறியும் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து மைத்திரியால் நீக்கப்பாட்டார். – என்றுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

செயற்படுகின்றனர். பெரும்பாலான ஊடகவியலாளர்களும் கூட அப்படித்தான் எண்ணிச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் உண்மை நிலை அதுவல்ல. இன்று தொழில்நுட்பம் நாம் கற்பனை பண்ண முடியாத அளவுக்கு விரிந்து, வியாபித்து நிற்கின்றது. நம்மை அறியாமலேயே நமது ஒவ்வொரு அசைவும் உலகளாவிய ரீதியில் நுணுக்கமாக நோட்டமிடப்படுகின்றது. நம்மில் பலர் அதை அறிந்திருப்பதில்லை. ‘மடியில் கனமில்லை என்றால் வழியில் பயமில்லை’ என்ற கணக்கில் நாம் ஊடாடுகிறோம். ஆனால் நமது ஒவ்வொரு அசைவும், உரையாடலும், தொடர்பாடலும், சுவருக்கும்காதுண்டு என்ற கணக்கில் கண்காணிக்கப்படுகின்றன என்பதை நான் அனுபவபூர்வமாக அறிந்துள்ளேன்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் உரையில் ஒரு விடயம் வெளிப்பட்டது. பலரும் அவதானித்தனரோ தெரியவில்லை. சாம்பிளுக்காக அதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பாக ‘சனல் 4’ அம்பலப்படுத்திய விடயங்கள் பற்றிய விவாதத்தில் கலந்துகொண்ட பிரேமதாஸ, இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கும் சஹ்றான் குழுவிற்கும் இடையிலான தொடர்புகளைச் சுட்டிக்காட்டும் நிகழ்வுகள் உள்ளன என்று அங்கு தெரிவித்தார்.

முதலாவதாக, உளவுத்துறை அதிகாரி ஒருவரின் ஐ.பி. முகவரி நோட்டமிடப்பட்டுக் கொண்டிருந்தது என்கிறார் அவர். தனது காதலியின் மொபைல் ஃபோனைப் பயன்படுத்தி ஸஹ்றான் குழுவின் உறுப்பினர்களை அந்த உளவுத்துறை அதிகாரி தொடர்பு கொண்டார் என்று **FBI** வழங்கிய தகவல் மேலும் விசாரிக்கப்படவில்லை என்று சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் கூறியிருக்கின்றார்.

இதில் வெளித் தெரிவது என்ன?

இங்குதான் விடயம் உள்ளது. எவ்.பி.ஐ. என்பது அமெரிக்க மத்திய அரசின் உளவுத்துறை. அது இலங்கையின் உளவுத்துறை அதிகாரிகளை எங்கிருந்தபடியோ மோப்பம் பிடித்து நோட்டமிட்டிருக்கின்றது. அந்த இலங்கை உளவுத்துறை அதிகாரி பயன்படுத்தும் மின்னஞ்சல் அல்லது இணைய தொடர்பாடலை வழிமறித்து அது ஊடுருவி இருக்கின்றது. அவர் தனது தொலைபேசியை இந்த விடயங்களுக்குப் பயன்படுத்தாமல், யாருக்கும் சந்தேகம் வராமல் இருக்கும் வகையில், தமது காதலியின் ஸ்மார்ட்போனை பயன்படுத்தியிருக்கிறார். ஆனால் அதற்குள்ளும் அமெரிக்க உளவுப்பிரிவு உள்நுழைந்து இருக்கின்றது என்பதுதானே அர்த்தம்..?

நம்மில் பலரின் – ஊடகவியலாளர்கள், அரசியல்வாதிகள், அவர்களின் உதவியாளர்கள், அரசு அதிகாரிகள் போன்றோரின் – ஊடாட்டங்கள் எல்லாம் அயல் பக்கத்தில் இருந்து சீனா பக்கம் வரை மிக நெருக்கமாக நோட்டமிடப்படுவதாகவே எனக்கு ஒரு சந்தேகம் உண்டு.

‘மடியில் கனமில்லையாதலால் வழியில் பயமில்லை’ என்பதுதான் நமது நிலைப்பாடு.

மோசமான யுத்தத்திற்கும் நடுவில், பல்வேறு ஆயுத குழுக்களுக்கு மத்தியில், இலங்கை இராணுவம் – இந்திய இராணுவம் – பொலிஸ் – கடற்படை – விமானப்படை – பிற ஆயுதப்படைகள், குழுக்கள் – பல்வேறு உளவுத் துறையினர் – சர்வதேச தரப்புகள் – அதிகார வர்க்கங்கள் – என்று ஒன்றுக்கொன்று முரண்பட்ட சக்திகளுக்கு மத்தியிலும், சுமார் மூன்று தசாப்த காலம் விலகியிராமல் ஊடாடி, உயிருடன் நிமிர்வதற்கு உதவிய ஒரே நம்பிக்கை நம் மடியில் கனமில்லை என்ற உறுதிதான்.

அப்படி இருப்பவர்கள் இந்த உளவு, வேவு நடவடிக்கைகளை உதாசீனப்படுத்தி நடக்கலாம். ஆனால் ஒரு தரப்புக்கு தெரியாமல் இன்னொரு தரப்புக்கு முண்டு கொடுக்கும் இரகசியப் பணியில் ஈடுபடுவோர் எச்சரிக்கையாக இருப்பார்களாக! அதை நீண்ட காலம் மறைத்துத் தாக்குப் பிடிப்பது தற்போதைய நவீன தொழில்நுட்ப முறையில் சாத்தியமேயற்றது என்பதுதான் எனது கருத்து.

நமது காதிலியே எதிர்த்தரப்பு தமது ரிஸீவரை மாட்டி இருப்பார்கள். கவனம்...!

# இந்த ஆண்டில் மட்டும் 1,000 வைத்தியர்களின் சேவையை இழந்தோம்!

## சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் தகவல்



நாட்டில் இந்த ஆண்டில் மட்டும் சுமார் ஆயிரம் வைத்தியர்கள் இராஜினாமா செய்துள்ளனர் எனப் பொதுக் கணக்குக் குழு கூடியபோது தெரியவந்துள்ளதாக சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ஜி.விஜேசூரிய தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்காக கோபா குழு கூடியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

05 வருட விடுமுறையில் வெளிநாடு செல்வது, சேவையில் இருந்து இராஜினாமா செய்தல், முன்னறிவிப்பின்றி இராஜினாமா செய்தல் மற்றும் குறிப்பிட்ட சேவைக் காலம் முடிந்து ஓய்வு பெறுதல் போன்ற காரணங்களால் இந்த வருடம் 957 வைத்தியர்களை சுகாதார அமைச்சு இழந்துள்ளது.

இந்த நிலையில் சில சிகிச்சை பிரிவுகளில் 24 மணி நேர சேவைகளை மேற்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்றார்.

வைத்தியர்களின் சேவைக்கு உரிய பெறுமதி இன்மையே வைத்தியர்கள் வெளிநாடு செல்வதற்கு பிரதான காரணமாக அமைந்துள்ளதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஹரித அளுத்கே தெரிவித்தார்.

இதேவேளை பெருமளவிலான தாதியர்களும் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர் எனக் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பயிற்சி தாதி திருமதி புஷ்பா ரம்யானி டி சில்வா தெரிவித்தார்.

இந்நிலையில், நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்து தட்டுப்பாடு மற்றும் மருந்துகளைக் கொள்வனவு செய்வது தொடர்பில் ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்குவதற்காக இரண்டு உப குழுக்களை நியமிப்பதற்கு குழுவின் தலைவர் லசந்த அழகியவண்ண நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாடு மற்றும் மருந்துகளை கொள்வனவு செய்வது தொடர்பில் ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள முதலாவது உப குழுவின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் இந்த உப குழுவின் ஏனைய உறுப்பினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான, டயானா கமகே, அசோக் அபேசிங்க, ஜயந்த கெட்டகொட மற்றும் ஹரினி அமரசூரிய ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் பிரதீப் உதுகொட தலைமையில் இரண்டாவது உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது.

இதன் ஏனைய உறுப்பினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான இசுரு தொடங்கொட, விமலவீர திஸாநாயக்க, மஞ்சுள திஸாநாயக்க, வீரசுமன வீரசிங்க மற்றும் முதிதா பிரஷாந்தி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் மனிதவள முகாமைத்துவம், சுகாதார அமைச்சின் கீழ் உள்ள வைத்தியசாலைகள், நிறுவனங்களின் முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அமைப்புகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் உள்ளிட்ட விடயங்களை இந்த உப குழு ஆராயவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரண்டு உபகுழுக்களும் எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆம் திகதி கோபா குழுவிற்கு அழைக்கப்பட்டு அந்த குழுக்களின் விசாரணைகள் மற்றும் பரிந்துரைகளை ஆராய்ந்து எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என கோபா குழுவின் தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து எதிர்ப்பு

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மற்றும் நிகழ்நிலை காப்பு சட்டமூலங்களை வன்மையாகக் கண்டிக்கிறோம் என சட்டத்தரணிகள் ஒன்றிணைவு அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட இரண்டு சட்டமூலங்களையும் உடனடியாக மீளப்பெற வேண்டும் என 'சட்டத்தரணிகள் ஒன்றிணைவு' அமைப்பு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

மார்ச் மாதம் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் குறித்து தற்போது வெளியிடப்பட்டுள்ள சட்டமூலத்தில் கவனத்திற்கொள்ளப்படவில்லை என சட்டத்தரணிகள் ஒன்றிணைவு சுட்டிக்காட்டியுள்ளது.

மக்களின் கருத்துகளைப் பெறாமல் இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது என அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலத்தின் ஊடாக மக்களுக்கு பொறுப்புக்கூறுதல், வெளிப்படைத்தன்மையுடன் செயற்படல் என்பவற்றை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது என சட்டத்தரணிகள் ஒன்றிணைவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதம், தவறான அறிக்கைகள், அதனுடன் தொடர்புடைய தவறான விளக்கங்கள் ஆகியவற்றின் வரையறைகள் இரண்டு சட்டமூலங்களிலும் மிகவும் சிக்கலானவையாகக் காணப்படுகின்றன என சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மக்களின் இயல்பான செயற்பாடுகள் மீது நிர்வாகக் கட்டுப்பாட்டை உருவாக்கி, கடுமையான சட்டங்களைத் திணிக்கும் இந்த சட்டமூலங்கள் விரும்பத்தகாத, தன்னிச்சையான முயற்சி என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த இரண்டு சட்டமூலங்களும் நீதித்துறையின் விடயங்களுக்கு அச்சுறுத்தலாக காணப்படுகின்றன என சட்டத்தரணிகள் ஒன்றிணைவு தெரிவித்துள்ளது.

மக்களின் மீற முடியாத சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு சட்ட வல்லுநர்களுக்கு இருப்பதும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## வாகன இறக்குமதி தவிர்ந்த ஏனைய

# இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விரைவில் முற்றாக நீக்கப்படும்!

### நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தகவல்

வாகன இறக்குமதி கட்டுப்பாடு தவிர்ந்த ஏனைய இறக்குமதி கட்டுப்பாடுகள் எதிர்வரும் மாதத்தில் நீக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியம் தொடர்பான மாநாடொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனை தெரிவித்தார்.

அத்தியாவசியமான இறக்குமதி களை மேற்கொள்ளக்கூடிய வகையில், அந்நிய செலாவணிக் கையிருப்பு வலுவடைந்து வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து பேணபடும் 600 வகையான பொருள்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகளில், வாகனங்களுக்கான 270 வகையான பொருள்களுக்கு விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி கட்டுப்பாடுகள் தவிர்ந்த ஏனைய கட்டுப்பாடுகளை நீக்க எதிர்பார்த்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் இந்த இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட பின்னர் விலை ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு சந்தைக்குக் கிடைக்கும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் எதிர்காலத்தில் திறந்த சந்தைப் பொருளாதாரத்திற்கு உரிய வகையில் செயற்படுவதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மன்னாரில் பெரும் தீப் பரவல் பல ஏக்கர் காடு எரிந்து நாசம்



(மன்னார் நிருபர்)

மன்னார் கீரி பகுதியில் உள்ள தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்குச் சொந்தமான காணிக்கு அருகில் ஏற்பட்ட தீப் பரவல் காரணமாக பல ஏக்கர் காடுகள் எரிந்து நாசமடைந்துள்ளன.

நேற்று சனிக்கிழமை மதியம் 2.30 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீப் பரவல் காரணமாக அப்பகுதியில் உள்ள மரங்கள், புதர்கள் உட்பட அனைத்திலும் தீ பரவியது. அதிக காற்றுக் காரணமாகத் தீயை கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. தொடர்ந்து வீசிய காற்றுக் காரணமாக அருகருகில் இருந்த காடுகளுக்கும் தீ பரவல் அடைந்தது.

இதனை தொடர்ந்து அருகில் இருந்த பொதுமக்கள் மற்றும் கடற்படையின் தொடர் முயற்சியினால் தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இருப்பினும் தீ பரவல் காரணமாக அப்பகுதியில் காணப்பட்ட ஆயிரக்கணக்கான பனை மரங்கள் உட்பட பல ஏக்கர் காடு எரிந்து நாசமாகியுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உரிய தீயணைப்பு பிரிவு காணப்பட்டமையால் வவுனியா தீயணைப்பு பிரிவுக்கு தகவல் வழங்கப்பட்ட போதிலும் அனைத்து எரிந்து அணையும் வரை தீயணைப்பு சேவை சம்பவ இடத்திற்கு வருகை தரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கோட்டா - பிள்ளையா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

– இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் மன்னிக்கவே முடியாத மாபெரும் குற்றச் செயல். இந்தத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் என்று சனல் 4 தொலைக்காட்சி அடையாளம் காட்டியுள்ள கோட்டாபயவும், பிள்ளையானும் மறுப்பு அறிக்கைகளை விட்டுத் தப்ப முயல்கின்றனர்.

அதேவேளை, சனல் 4 தெலைக்காட்சியின் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ள ஆணைக்குழுவும், அரசு நியமிக்கவுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவும் கோட்டாபயவையும், பிள்ளையானையும் காப்பாற்றுவதற்கான திட்டங்களாகும்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விவகாரம் இன்று சர்வதேச சமூகத்தின் முழுக் கவனத்தையும் ஈர்த்துள்ளது. எனவே, இது தொடர்பில் சர்வதேச விசாரணைக்கு ஜனாதிபதி இடமளிக்க வேண்டும். அதைவிடுத்துத் தூக்கிலிடப்பட வேண்டிய மாபெரும் மனிதப் படுகொலைக் குற்றவாளிகளான கோட்டாபயவையும், பிள்ளையானையும் பாதுகாக்க ஜனாதிபதி முயற்சிக்கக் கூடாது.

கோட்டாபய, பிள்ளையான் மட்டுமல்ல உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்ட பாதுகாப்புத் தரப்பினர், அரசியல்வாதிகள் மற்றும் தனிநபர்கள் ஆகியோருக்கும் உரிய தண்டனைகள் வழங்கப்பட வேண்டும்.” – என்றார்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேச மட்டத்தில் விசாரணைக்குத் தான் எந்நேரமும் தயார் என்றும், தன் மீதான குற்றச்சாட்டுக்கள் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டால் தூக்கு மேடைக்கும் செல்லத் தான் தயார் என்றும் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐம்பது ரயில் என்ஜின்கள் பழுது; அதனால் போக்குவரத்துப் பாதிப்பு

ஐம்பது ரயில் என்ஜின்கள் பல்வேறு காரணங்களால் பழுதடைந்து காணப்படுகின்றன என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக ரயில் போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்தியா, ஜப்பான், சீனா, அமெரிக்கா மற்றும் கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட என்ஜின்கள் தொழில்நுட்பக் குறைபாடுகளால் பழுதடைந்துள்ளன என ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் எம்.ஜே. இதிபொலகே தெரிவித்தார்.

நாளாந்தம் ரயில் போக்குவரத்திற்கு 75 என்ஜின்கள் தேவைப்படுகின்றன. ஆனால், தற்போது 50 என்ஜின்களே உள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, தொழில்நுட்பக் கோளாறு காரணமாக 20 என்ஜின் இயந்திரத் தொகுதிகள் சேவையில் ஈடுபடவில்லை.

நாளாந்த ரயில் சேவைக்கு 90 இயந்திர தொகுதிகள் தேவைபடுகின்றன. ஆனால், தற்போது 70 என்ஜின் இயந்திர தொகுதிகளே சேவையில் ஈடுபடுகின்றன என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

# இரட்டைக் குழந்தைகள் உயிரிழப்பு; வைத்தியசாலையின் மீது குற்றச்சாட்டு

களுபோவில போதனா வைத்தியசாலையின் சிசு பிரிவில் சிகிச்சை பெற்று வந்த இரட்டைக் குழந்தைகள் உயிரிழந்தமை தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்தின் மீது பெற்றோர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கடந்த 9 ஆம் திகதி பிறந்த இரண்டு குழந்தைகளில் ஒன்று கடந்த 18 ஆம் திகதி இறந்துள்ளது. நேற்று அதிகாலை மற்றைய குழந்தையும் உயிரிழந்துள்ளது.

கடந்த 18 ஆம் திகதி உயிரிழந்த குழந்தையின் மரணத்திற்கு சுவாசக்கோளாறே காரணம் என வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ள போதிலும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என பெற்றோர் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் வைத்தியசாலை பணிப்பாளருக்கு எதிராகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் களுபோவில போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் நிரஞ்சன் பாலகிருஷ்ணன் கருத்து தெரிவிக்கையில், இந்த விடயம் தொடர்பில் குழந்தையின் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

அந்த முறைப்பாட்டை சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைத்துள்ளோம் என பிரதி பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

# சிகையலங்கார நிலையத்துக்குள் புகுந்த பஸ் இருவருக்குக் காயம்!

திருகோணமலை – மட்டக்களப்பு பிரதான வீதி தானியகம பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் இரண்டு கடற்படை உத்தியோகத்தர்கள் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தானியகம பிரதேசத்தில் கடற்படைக்குச் சொந்தமான பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி சிகை அலங்கார நிலையம் ஒன்றின் மீது மோதி விபத்துக்குள்ளானதாக சீனக்குடாப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்ழ் காயமடைந்தவர்களில் ஒருவர் கடற்படை தளத்தின் வைத்தியசாலையிலும், பலத்த காயங்களுக்குள்ளான கடற்படை உத்தியோகத்தரான என். எஸ். மதுஷங்க (39வயது) திருகோணமலை பொது வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரியவருகிறது.




இதேநேரம் இந்த விபத்தில் சிகை அலங்கார நிலையத்துக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளொன்றும் சேதமடைந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இவ்விபத்து தொடர்பில் சீனக்குடா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பாடசாலைச் சீருடைகளுக்கான நிதியை முழு உதவியாக வழங்க சீனா இணக்கம்

நாட்டின் பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த ஆண்டிற்கு தேவையான சீருடைக்கு செலவாகும் முழுத் தொகையையும் வழங்க சீனா இணங்கியுள்ளது.

கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சியில் கலந்துகொண்டு கருத்துரைத்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு 70 வீதமான பாடசாலைச் சீருடைகளை சீன அரசாங்கம் வழங்கியிருந்தது என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், அடுத்த ஆண்டிற்கு தேவையான பாடசாலை சீருடைகளையும் வழங்க சீனா இணங்கியுள்ளது என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

தற்போது 11 இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் காலை உணவு திட்டத்தை 22 லட்சம் வரை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உலக உணவுத் திட்டம் இதற்கு அனுசரணை வழங்கவுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தற்போது 2024 ஆம் ஆண்டுக்கு அவசியமான பாடப்புத்தகங்களில் 50 வீதமானவை அச்சிட்டு முடிக்கப்பட்டுள்ளன என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளார்.

தனியார் துறையினருக்கு வழங்கப்படவுள்ள பாடப்புத்தகங்களை அச்சிடும் நடவடிக்கை இரண்டு வாரங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது எனவும் டிசம்பர் 15 ஆம் திகதியளவில் அனைத்து பாடப்புத்தகங்களையும் அச்சிடும் பணி நிறைவடையும் என்றும் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

(இலவசப் பாட நூல் விநியோகம் தொடர்பில் கல்வி அமைச்சர் வெளியிட்டுள்ள தகவல்கள் இன்னொரு பக்கத்தில் தனியாகப் பிரசுரமாகியுள்ளது.)

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அதிகாரத் திமிர் நடவடிக்கை

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கென இந்த ஆண்டின் முற்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுக்களை தேர்தல் நடத்தப்படாத நிலையில் ரத்துச் செய்வதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலை ரத்துச் செய்வதற்கான விசேட சட்டமூலம் ஒன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அது நிறைவேற்றப்படுவதன் மூலமே வேட்புமனுக்களை ரத்துச் செய்ய முடியும் என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

இந்தத் தேர்தல் நடத்தப்படாமல் வேட்பு மனுக்கள் ரத்து செய்யப்படுமாயின் சுமார் 100 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட இழப்பு ஏற்படுமென 'பவ்ரல்' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றோஹண ஹெட்டியாராய்ச்சி தெரிவித்திருக்கின்றார். இந்த இழப்புக்குப் பொறுப்புக் கூறுவது யார் என்றும் அவர் கேள்வி எழுப்பிருக்கின்றார். சரியான கேள்வி.

இலங்கையின் இப்போதைய இழிநிலைக்குக் காரணம் பொருளாதாரம், அரசியல், படை நடவடிக்கைகள் உட்பட எல்லா விடயங்களிலும் பொறுப்பு கூறல் கடப்பாடு இன்மையே என்று நேற்று மாலை இந்தப் பத்தியில் சுட்டிக் காட்டியிருந்தோம்.

அந்த வரிசையில் இன்னொரு பொறுப்பு கூறல் இன்மை விடயத்தால் மக்களின் வாக்குரிமை பறிக்கப்படும் பெரும் அட்டூழியமும், அத்தோடு நிதி மற்றும் மனித உடல் உழைப்பு, நேர விரய இழப்பும் அரங்கேறும் மற்றொரு விவகாரமாக இது அமைகின்றது.

இந்த இழப்புக்கு உண்மையில் முழு அளவில் தனித்துப் பொறுப்புக் கூற வேண்டியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான் என்பது பளிங்குக் கல் போல தெளிவாகத் தெரியும் விடயம். ஆனால் அதற்காக அவர் பொறுப்புக் கூறப் போவதில்லை. அவர் மீது எந்த நடவடிக்கையும் இதற்காக எப்போதும் எடுக்கப்படவும் மாட்டாது. நமது நாட்டின் சட்டம் அத்தகைய ஓட்டைகள் மிகுந்தது.

இந்த உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படாமல் போனமைக்கான பிரதான காரணமே அவரின் - அந்தத் தனி மனிதரின் - அரசியல் சுய லாப உள்நோக்கம்தான். அடுத்துத் தான் கண் வைத்திருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தேசிய ரீதியில் எந்தத் தேர்தலையும் நடத்த அனுமதித்தால், அதன் முடிவுகள் அதன்பின் வரக்கூடிய ஜனாதிபதி தேர்தலில் தமக்கு எதிராகத் திரும்பிவிடும் என்ற களப்புற யதார்த்தத்தை உணர்ந்து, இந்தத் தேர்தலுக்கு ஆப்படித்திருக்கின்றார் அவர்.

சரி. அந்த முடிவாவது எந்த உள்நோக்கம் கொண்டது என்ற சர்ச்சை காரணமாக வேறு அர்த்தங்கள் கற்பிக்கப்பட்டு, சமாளிக்கப்படலாம் என்று வைத்துக் கொண்டாலும், மேற்படி உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்ட போதே நிதி அமைச்சர் என்ற முறையில் அதற்கு நிதி ஒதுக்காமல், அதை மேற்கொண்டு முன்னெடுக்க விடாமல், இடை நடுவில் நிதித் தடை மூலம் தான் தடுத்து விடுவார் என்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தெரியும். அதனால் அதை அவர் பகிரங்கமாக - உத்தியோக பூர்வமாக - அப்போதே - முற்கூட்டியே அறிவித்திருந்தால் இப்படி வேட்புமனுக்கள் கோரி, நூறு கோடி ரூபாவுக்கும் மேல் நிதியும், பல்லாயிரம் வேட்பாளர்கள் மற்றும் கட்சிகளின் மனித செயற்பாடு, நிதி, உழைப்புப் போன்றவையும் வீண் விரயமாகியிருக்காது அல்லவா?

தமது இந்தக் குள்ளநரித்தன நடவடிக்கைக்காகத் தாம் எப்போதும் பொறுப்புக் கூறத் தேவையில்லை என்ற அதிகாரத் திமிரில்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அப்படி நடந்து கொண்டார். வேட்பு மனுக்கள் கோரப்பட்டு, கட்சிகள் முண்டியடித்து, வேட்பாளர்களைத் தெரிவு செய்து, பணத்தை வீண்விரயமாக்கி, மனித உழைப்பைத் தொலைத்து, எல்லாம் நடந்த பின்னர் ஜனாதிபதியின் நிதித் தடை மூலம் தேர்தல் நடத்தப்படாமல் அது அரைவாசியில் நிறுத்தப்பட்டுள்ளது.

அந்த மோசமான நடவடிக்கைக்குப் பொறுப்பு கூறுவதற்கான கடப்பாடு தமக்கு இல்லை என்ற அதிகாரத் திமிரில் அவர் அப்படி நடந்து கொண்டாலும், அதற்கு மக்கள் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் உரிய பதிலடி கொடுக்க தாராளமான வாய்ப்புகள் உண்டு என்பதை மட்டும் அவருக்கு நினைவு படுத்த விரும்புகிறோம்.

# முல்லையில் அழுகிய நிலையில் தூக்கில் தொங்கிய சடலம். மீட்பு



முல்லைத்தீவு மல்லாவி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேறங்கண்டல் மங்கை நகர் பகுதியில், கதவுகள் பூட்டப்பட்ட வீடு ஒன்றுக்குள் தூக்கில் தொங்கியவாறு அழுகிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை அடையாளம் காணப்பட்டுள்ளது.

அயலவர்களால் மல்லாவி பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டமையையடுத்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மல்லாவி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய உத்தமன் என்பவர் ஆவார்.

# மாடியில் இருந்து விழுந்து 62 வயதுடைய பெண் சாவு

பலங்கொட, வெலிஹரனாவ பகுதியில் உள்ள மூன்று மாடி கட்டடத்தின் மேல் மாடியில் இருந்து நேற்று முன்தினம் பெண் ஒருவர் வீழ்ந்து உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

62 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பெண் அந்த அடுக்குமாடிக் கட்டடத்தில் வாடகை அடிப்படையில் வசிப்பவர் எவும் தெரிவிக்கப்படுகிறது.

அப்பெண் கட்டடத்தின் மேல் மாடியில் ஏறிய சந்தர்ப்பத்தில் தவறி கீழே விழுந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பலாங்கொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வேட்புமனு இரத்தானால் நூறு கோடி ரூபா இழப்பு!

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் இரத்து செய்யப்படுமாயின், நூறு கோடி ரூபாவிற்கும் அதிகமான நிதி இழப்பு ஏற்படும் என 'பவ்ரல்' அமைப்புத் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டுள்ள இந்தத் தீர்மானம் தொடர்பில் தாம் மிகவும் கவலையடைகிறார் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றோஹண ஹெட்டியாராச்சி கூறியுள்ளார்.

இவ்வாறானதொரு தீர்மானத்தை மேற்கொள்வதால் ஏற்பட்டுள்ள நிதி இழப்புக்கு யார் பொறுப்பு கூறுவது என்று கேட்கும் அவர் தற்போதைய நிலைவரத்தைக் கருத்திற்கொண்டு உள்ளூராட்சித் தேர்தலை விரைவாக நடத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

## வர்த்தகர் ஒருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

அந்த வர்த்தகர் காலி – டிக்சன் வீதியில் காரில் பயணித்த வேளை அவரை இலக்கு வைத்து துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தியுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிப் பிரயோகத்தில் அந்த வர்த்தகர் சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளார்.

சந்தேகநபர்கள் கைது செய்யப்படாத நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் காலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழகத்துக்கு காவிரி நீர் வழங்க எதிர்ப்பு: கர்நாடகா முழுவதும் பா.ஜ.க. போராட்டம்!





தமிழகத்துக்கு காவிரி நீர் வழங்க எதிர்ப்பு தெரிவித்து கர்நாடகாவில் மாநிலம் தழுவிய போராட்டத்தில் பா.ஜ.க. ஈடுபட்டுள்ளது.

தமிழகத்துக்கு அடுத்த 15 நாட்களுக்கு விநாடிக்கு 5 ஆயிரம் கன அடி காவிரி நீரை திறந்துவிடவேண்டும் என கடந்த 18 கடந்த திகதி நடந்த காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில், கர்நாடக அரசுக்கு உத்தரவிரப்பட்டது.

இதை எதிர்த்து கர்நாடக அரசு தாக்கல் செய்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், மேலாண்மை ஆணையத்தின் உத்தரவை ரத்து செய்ய முடியாது என தெரிவித்தது.

இந்த நிலையில், தமிழகத்துக்கு காவிரி நீர் வழங்க எதிர்ப்பு தெரிவித்து கர்நாடகாவில் மாநிலம் தழுவிய போராட்டத்தில் பா.ஜ.க. நேற்று ஈடுபட்டது.

பெங்களூரில் நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்ற பா.ஜ.க. தலைவரும், அந்த மாநில முன்னாள் முதல்வருமான பசவராஜ் பொம்மை, கர்நாடகாவில் போதுமான மழை பொழியாத நிலையில், தமிழகத்துக்கு காவிரி நீரை வழங்குவது கர்நாடகாவின் நலனுக்கு எதிரானது.

தமிழகத்துக்கு காவிரியில் இருந்து தண்ணீர் திறக்கும் மாநில அரசை கண்டித்து மாநிலம் முழுவதும் பா.ஜ.க. சார்பில் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

கர்நாடகாவில் உற்பத்தியாகும் நதி காவிரி. எனவே, காவிரி கர்நாடகாவுக்கே சொந்தம். இது தமிழகத்தின் சொத்து அல்ல. இருந்தபோதும், அவர்கள் காவிரி நீரை பெற்று வருகிறார்கள். கர்நாடகா அணைகளைக் கட்டியதால்தான் தமிழகத்துக்கு தற்போது தண்ணீர் திறக்க முடிகிறது என்று தெரிவித்துள்ளார்.

மாண்டியாவில் நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்ற பா.ஜ.க. தலைவர் சி.டி. ரவி, காவிரி நீர் தமிழகத்துக்கு வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து மாண்டியா மாவட்டத்தில் முழு அடைப்புப் போராட்டம் நடைபெற்று வருகிறது. விவசாய சங்கங்கள் அழைப்பு விடுத்துள்ள இந்த முழு அடைப்புக்கு பா.ஜ.கவின் ஆதரவை தெரிவிக்கவே நான் இங்கு வந்துள்ளேன்.

இண்டியா கூட்டணியை வலுப்படுத்தவே கர்நாடக காங்கிரஸ் அரசு தமிழகத்துக்கு தண்ணீர் திறக்கிறது. காவிரி நீரை திறந்து விடுவதன் மூலம் காங்கிரஸ் தங்கள் கூட்டணியை பாதுகாக்கிறது என குற்றம் சாட்டினர்.

மாண்டியாவில் முன்னெடுக்கப்பட்ட முழு அடைப்புப் போராட்டம் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தின் பல பகுதிகளிலும் கடைகள், வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளதால் வீதிகளில் வாகன போக்குவரத்து குறைவாகவே காணப்பட்டுள்ளது.

அத்துடன், மாண்டியா மாவட்டத்தில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழகத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டதை எதிர்த்து கர்நாடகாவில் நேற்று முன்தினம் போராட்டம் நடைபெற்றது. கன்னட ரக்‌ஷன வேதிகே அமைப்பினரும், விவசாய சங்கத்தினரும் போராட்டம் நடத்தினர். பெங்களூர், மைசூரு, மண்டியா, ராம்நகர், சாம்ராஜ்நகர் ஆகிய இடங்களில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

காவிரி மேலாண்மை ஆணையம் தனது உத்தரவை திரும்ப பெற வேண்டும் எனவும், தமிழகத்துக்கு திறக்கப்பட்ட தண்ணீரை நிறுத்த வேண்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

# தமிழகத்தில் 100 முகாம்கள் மூலம் 2 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு!



கருணாநிதி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, தமிழகம் முழுவதும் 100 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தி, ஆண்டு இறுதிக்குள் 2 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற இலக்கை அடைய சிறப்பு நடவடிக்கைகள் எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் சி.வி.கணேசன் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் அமைச்சர் சி.வி. கணேசன் தலை மையில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய அமைச்சர் சி.வி.கணேசன், தமிழகத்தில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் அதிக அளவில் தனியார் துறையில் பணி நியமனம் பெறும் வகையில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்களை நடத்த வேண்டும்.

கருணாநிதி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, வேலைவாய்ப்பு துறையால் தமிழகமெங்கும் 100 சிறப்பு தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தி இந்த ஆண்டின் இறுதிக்குள் 2 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற இலக்கை அடைய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

கல்வி தொலைக்காட்சி வாயிலாக போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் இளைஞர்கள் பயனடையும் வகையில், பயிற்சிக் காணொளிகள் ஒளிபரப்பும் திட்டம் முதல்வரால் தொடங்கப்பட்டுள்ளது. இதை அனைத்து போட்டித் தேர்வு ஆர்வலர்களும் பயன்படுத்தி அரசு பணி பெற விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் சேர்க்கை மற்றும் தேர்ச்சி விகிதம் 100 சதவீதத்தை எட்ட வேண்டும். தொழிற்பயிற்சி மாணவர்களுக்கு 100 சதவீதம் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்ற நிலையை உருவாக்குவதுடன், கிராமப்புற மாணவர்கள் தங்களது நிலையை உயர்த்திக் கொள்ளும் வகையிலான திறன் பயிற்சி அளிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# கனடா வாழ் இந்துக்கள் அச்சம் கொள்ள வேண்டாம்!



காலிஸ்தான் பயங்கரவாதி கொலை தொடர்பாக இந்தியா மற்றும் கனடா இடையிலான உறவு பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்துக்களை நாட்டை விட்டு வெளியேறவேண்டும் என மிரட்டும் செயல் வெறுக்கத்தக்கது. இதற்கு ஒருபோதும் கனடா இடமளிக்காது என கனடா அரசு தெரிவித்துள்ளது.

கனடாவில் காலிஸ்தான் பிரிவினை வாத பயங்கரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த ஜுன் மாதம் கொலை செய்யப்பட்டதில் இந்திய உளவாளிகளின் பங்கு இருக்கிறது என கனடா பிரதமர் ஜஸ்டின் நாடாளுமன்றத்தில் தெரிவித் திருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கு இந்தியா திட்டவட்டமாக மறுப்பு தெரிவித்தது. இந்த விவகாரத்தால் இரு நாடுகளின் உறவில் விரிசல் ஏற்பட்டது.

இரு நாடுகளும் பரஸ்பரம் தூது வர்களை வெளியேற்றி நடவடிக்கை மேற்கொண்டனர். மேலும் கனடா நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு விசா வழங்குவதை இந்தியா நிறுத்தி வைத்துள்ளது.

இந்த பதற்றமான சூழலில், கனடாவில் வசிக்கும் இந்துக்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என மிரட்டும் வகையில் சமூக வலைதளங்களில் சிலர் காணொளிகளை பதிவிட்டு வருகின் றனர்.

சமூக ஊடக வலைதளங்களில் அதிகம் பகிரப்பட்டு வரும் இந்த கணொளிகளால் கனடா இந்துக்களிடையே அச்சம் நிலவுகிறது. இதைக் கருத்தில்கொண்டு கனடா பொது பாதுகாப்புத் துறை வெளி யிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்,

'இந்துக்களுக்கு எதிராக பகிரப்ப டும் காணொளி புண்படுத்தக் கூடியது மற்றும் வெறுக்கத்தக்கது. மேலும், அனைத்து கனடா நாட்டவர்களுக்கும் மற்றும் நமது மதிப்புகளுக்கும் அவமா னகரமானது.

வெறுப்புணர்வுக்கு ஒருபோதும் கனடா இடமளிக்காது. அதேபோல், மக்களைப் பிளவுபடுத்த மட்டுமே உதவும் மிரட்டல் அல்லது பயத்தைத் தூண்டுதல் போன்ற செயல்களுக்கும் இந்த நாட்டில் இடமில்லை.

ஒருவரையொருவர் மதித்து, சட்டத்தின் விதிகளைப் பின்பற்ற மக்களிடம் கேட்டுக்கொள்கிறோம். கனடாவில் வசிக்கும் அனைவரும் பாதுகாப்பாக உணர வேண்டும்' என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

# பிரித்தானியாவில் சிகரெட்டுக்கு தடை: பிரதமர் ரிஷி சுனக் தீவிர ஆலோசனை



பிரித்தானியாவின் அடுத்த தலை முறையினர் சிகரெட் பயன்படுத்துவதை முழுமையாக தடுக்கும் நடவடிக்கைகளில் அந்த நாட்டு பிரதமர் ரிஷி சுனக் ஈடுபட்டு வருகிறார் என சர்வதேச ஊடகங்கள் செய்து வெளியிட்டுள்ளன.

மேலும், சிகரெட் பயன்படுத்துவதை முழுமையாக தடுக்கும் வகையில் ரிஷி சுனக் விரைவில் அறிவிப்பை ஒன்றை வெளியிட உள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ள.

முன்னதாக நியூசிலாந்து இதேபோன்ற ஒரு நடவடிக்கையை எடுத்திருந்தது. அடுத்த தலைமுறை மக்கள் சிகரெட் பழக்கத்திற்கு அடிமையாவதைத் தடுக் கும் வகையில் கடந்தாண்டு நியூசிலாந்து ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டது.

இந்த நிலையில் 2009 ஜனவரி 1 ஆம் திகதிக்குப் பிறகு பிறந்த ஒவ்வொரு வரும் நியூசிலாந்தில் புகையிலை விற் கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்ற ஒரு தடை விதிப்பது குறித்தே ரிஷி சுனக் இப்போது தீவிர மாக ஆலோசித்து வருகிறார் என தெரிவிக் கப்படுகிறது. இது குறித்த கேள்விக்குப் அந்நாட்டு அரசின் செய்தித் தொடர்பாளர் கருத்து வெளியிடுகையில்,

2030 ஆம் ஆண்டில் புகை பிடிக்கும் நபர்களே இல்லாத நாடாக மாற வேண்டும் என்பதே எங்கள் இலக்கு. இதற்காகப் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

புகை பிடிக்கும் பழக்கத்தைக் கைவிடும் மக்களை ஊக்குவிக்க விரும்புகிறோம். இவற்றை மனதில் வைத்தே தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

# தைவானில் தொழிற்சாலை தீயில் ஐவர் பலி

தைவானில் தொழிற்சாலை தீ விபத் தில் சிக்கி 5 பேர் உடல் கருகி பலியாகி னர்.

தைவான் நாட்டின் பிங்டங் மாகாணத் தில் கோல்ப் பந்து தயாரிப்பு தொழிற் சாலை ஒன்று செயல்படுகிறது. இங்கு வழக்கம்போல் தொழிலாளர்கள் வேலை பார்த்து கொண்டிருந்தனர். அப்போது திடீரென அங்கு காஸ் சிலிண்டர் வெடித் துச் சிதறியது. இதில் அந்த தொழிற்சாலை முழுவதும் தீ கொழுந்து விட்டு எரிந்தது. இந்த தீ மளமளவென மற்ற பகுதிகளுக் கும் வேகமாக பரவியது.

இதனையடுத்து தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு சென்று தண்ணீரை பீய்ச்சியடித்தனர். பல மணி நேர போராட் டத்துக்கு பின்னர் தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இந்தத் தீ விபத்தில் சிக்கி 5 பேர் உடல் கருகி பலியாகினர். நூற்றுக்கும் மேற் பட்டோருக்கு படுகாயம் ஏற்பட்டது. மீட்பு படையினர் அவர்களை மீட்டு சிகிச்சைக் காக ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். மேலும் சிலர் மாயமாகி உள்ளமை யால் தொடர்ந்து அங்கு மீட்பு பணி நடை பெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித் தனர்.

# மின்சார மீற்றரில் மோசடி
# 2 வீட்டுக்காரர்கள் கைது!

## மட்டக்களப்பு இருதயபுரத்தில்



மட்டக்களப்பு பொலிஸ் தலைமையக பிரிவிலுள்ள இருதயபுரம் பகுதியில் மின்சார அளவீடான மீற்றரில் மோசடி செய்த வீட்டு உரிமையாளர்கள் இருவரை நேற்று முன்னினம் வெள்ளிக்கிழமை மாலை கைது தாங்கள் செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் இரு வீடுகளில் பொருத்தப்பட்டிருந்த மின்சார மீற்றரில் சட்டவிரோதமாக மோசடி செய்து மின்சாரத்தை பெற்றுவந்துள்ளமை மின்சார சபையினரால் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து, கொழும்பில் இருந்து வருகை தந்த உத்தியோகத்தர்கள் பொலிஸாருடன் அந்த இரு வீட்டையும் முற்றுகையிட்டனர்.

இதன்போது, மின்சார மீற்றரை சோதனையிட்டபோது அதில் இருந்து திருட்டுத்தனமாக மின்சாரத்தை பெற்றுள்ளமை கண்டுபிடித்ததையடுத்து, அந்த இரு வீட்டின் உரிமையாளர்களையும் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப்ன்பொலிஸார் தெரிவித்தனர்.



# முட்டை, கோழி இறைச்சியை ஏற்றுமதி செய்யத் திட்டமாம்!



முட்டை மற்றும் கோழி இறைச்சியை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் தொடர்பில் ஆராயுமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மாலைத்தீவு உட்பட பல நாடுகளுக்கு ஏற்கனவே கோழி இறைச்சி மற்றும் முட்டை ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் இலங்கை முட்டைகளை இறக்குமதி செய்ய வேண்டும்.

எவ்வாறாயினும், அடுத்த வருடத்திற்குள் நாட்டுக்குள் முட்டை மற்றும் கோழி இறைச்சி மிதமாக உற்பத்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

2024 ஒகஸ்ட் மாதத்திற்குள் முட்டை உபரியாக உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுவதாகவும், உலக சந்தையில் உள்ள வாய்ப்புகளை ஆராய ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளதாகவும் விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# தடை செய்யப்பட்ட பொலித்தீன்கள் தயாரிப்பாளர்கள் மீது நடவடிக்கை!



மத்திய சுற்றாடல் அதிகாரசபை கடந்த வாரம் கண்டி, பேராதனை மற்றும் மத்திய மாகாணத்தின் பல பகுதிகளில் 20 மைக்ரொனுக்கும் குறைவான அளவுடைய லஞ்ச் ஷீட்களை தயாரிப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்தது.

மத்திய மாகாணத்தில் உள்ள நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் உதவியுடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபை அதிகாரிகளால் இந்த சோதனை நடத்தப்பட்டது. தரம் குறைந்த மதிய உணவு ஷீட்களை விற்பனை செய்த 400 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டது. பிளாஸ்டிக் கைப்பிடிகள் கொண்ட சிறிய பொலித்தீன் பாக்கெட்கள் மற்றும் கொட்டன் பட்கள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள நபர்களையும் அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

பொலிஸாரின் உதவியுடன் எதிர்காலத்தில் ஏனைய பிரதேசங்களிலும் இவ்வாறான சோதனைகள் மேற்கொள்ளப்படும் என அதிகாரசபை தலைவர் சுபுன் பத்திரகே தெரிவித்தார்.

தரம் குறைந்த பொலித்தீன் தாள்கள் மற்றும் பைகள் மற்றும் பிற மக்காத பொருள்களை உற்பத்தி செய்வதற்குத் தடை விதித்து வர்த்தமானி அறிவித்தல் மூலம் முன்னர் அறிவிக்கப்பட்ட போதிலும், பல உற்பத்தியாளர்கள் மற்றும் கடை உரிமையாளர்கள் அந்தத் தடையைப் புறக்கணித்தமை வருத்தமளிக்கிறது. நாடுமுழுவதும்உள்ளஅனைத்து சூப்பர் சென்டர்களும் இந்தத் தடையை மீறவில்லை என்றும், சுற்றுச்சூழலுக்கு உகந்த பொலித்தீன் பைகள் மற்றும் லஞ்ச் ஷீட்களை மட்டுமே விற்பனை செய்வதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஒன்ராறியோ மாகாண அமைச்சராகத் தமிழர்





கனடா நாட்டின், ஒன்றாறியோவின் சட்டசபையின் ஸ்காபரோ – றூஜ் பார்க் தொகுதிக்கான சட்டமன்ற உறுப்பினராக இருப்பவர் விஜய் தணிகாசலம். இவர் நேற்று முன்தினம் போக்குவரத்து துறையின் துணை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து விஜய் தணிகாசலம் ட்விட்டரில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்தப் பதிவில், மாகாண பிரதமருடன் இணைந்து ஒன்ராறியோ மக்களுக்காகப் பணியாற்ற போக்குவரத்துத் துறை இணை அமைச்சராக நியமிக்கப்பட்டமைக்கு மிகவும் பெருமைப்படுகிறேன்.

ஸ்காபரோ – றூஜ் பார்க் தொகுதி மக்களின் தொடர்ச்சியான ஆதரவுக்காகவும், அவர்கள் என் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன் என தெரிவித்துள்ளார்.

இந்த பதிவில் தன் பெற்றோருடன் இருக்கும் புகைப்படத்தையும் விஜய் தணிகாசலம் வெளியிட்டுள்ளார்.





# இலவச பாடநூல் விநியோகம் 2024 ஆரம்பிக்க முன் பூர்த்தி

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த உறுதி

2024 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் அடுத்த வருடத்திற்கான பாடப்புத்தகங்களை பாடசாலை மாணவர்களிடையே விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

ஹோமாகம, பிடிபனவில் அமைந்துள்ள கல்வி வெளியீடுகள் திணைக்களத்தின் பிரதான களஞ்சியசாலையில் இருந்து நாடளாவிய ரீதியில் உள்ள பிராந்திய மத்திய நிலையங்களுக்கு பாடப்புத்தகங்கள் விநியோகிக்கப்படும் இடத்தை பார்வையிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு மட்டுமே பாடசாலை சீருடைப் பொருள்கள் வழங்கப்படும் என பல்வேறு ஆர்வமுள்ள தரப்பினர் பரப்பும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளையும் அமைச்சர் நிராகரித்துள்ளார்.

சீருடை துணிகள் மற்றும் மதிய உணவு ஆகிய இரண்டும் வழமை போன்று தாமதமின்றி வழங்கப்படும் என அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

இந்த அனைத்து பௌதீக வசதிகளையும் வழங்குவதற்கான எதிர்பார்ப்பு 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள் சரியான நேரத்தில் பாடத்திட்டத்தை பூர்த்தி செய்வதையும் உள்ளடக்கியது. அத்துடன் கொவிட் 19 தொற்றின் போது சீர்குலைந்த அனைத்து கல்வி நடவடிக்கைகளையும் மீட்டெடுப்பதும் இதன் நோக்கமாகும்.

கடந்த ஆண்டை ஒப்பிடும் போது, இந்த ஆண்டு பாடசாலை பாடப்புத்தக அச்சிடும் பணியை, குறைந்த செலவில், உரிய நேரத்தில் செய்து முடித்ததால் 4,000 மில்லியன் ரூபாவை அரசிற்கு வழங்க முடியும் என அமைச்சர் தெரிவித்தார்.

அரச அச்சு நிறுவகம் (SPC) இலாபம் ஈட்டத் தொடங்கியுள்ளது என்றும், எதிர்காலத்தில், அனைத்து பாடசாலைப் பாடப்புத்தகங்கள், பயிற்சி புத்தகங்கள் மற்றும் பிற அரச ஆவணங்களை அச்சிடும் வேலை அரச அச்சகத்துக்கு வழங்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நாட்டில் கல்வி சீர்திருத்தங்களை உறுதிப்படுத்துவதற்கு, இந்த நிறுவனங்கள் மற்றும் ஊழியர்களின் ஆதரவும் அர்ப்பணிப்பும் இன்றியமையாதவை என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.




# தனுஷ்கோடி சென்ற மட்டு. இளைஞர் கைது

இலங்கையில் இருந்து தனுஷ்கோடி கடல் பகுதிக்கு சட்டவிரோதமாக சென்ற இளைஞரை இந்திய கடலோரப் பொலிஸார் கைது செய்தனர்.

கடந்த திங்கட்கிழமை தனுஷ்கோடி அருகே உள்ள மணல் திட்டில் இலங்கை அகதி ஒருவர் வந்திறங்கி இருக்கிறார் என மீனவர்கள் மூலம் கடலோரப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதைத் தொடர்ந்து, கடலோரப் பொலிஸார் மீனவர்கள் உதவியுடன் மீன்பிடி படகு ஒன்றில் நடுக்கடல் மணல் திட்டில் தவித்துக் கொண்டிருந்த இலங்கை மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த கிஷோகரன் என்ற கிஷோர் (வயது 31) என்பவரை மீட்டனர்.

தொடர்ந்து மண்டபம் மறுவாழ்வு முகாமில் வைத்து கிஷோகரனிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வந்தனர்.

விசாரணையில் அவர் இலங்கையில் பண மோசடி வழக்கில் சம்பந்தப்பட்டு சிறை சென்றவர் எனவும் வழக்கு விசாரணையில் இருந்து தப்பிப்பதற்காக தமிழகம் வந்துள்ளார் எனவும் மீண்டும் இலங்கை செல்ல முயற்சிகள் மேற்கொள்ள வாய்ப்பு உள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதனால், பாஸ்போர்ட் தடை சட்டத்தின் கீழ் அவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து அவரை தனுஷ்கோடி பொலிஸார் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, சிறையில் அடைத்தனர்.

# மாணவி மீது துஷ்பிரயோகம் 14 வயது மாணவன் கைது!



பன்னிரண்டு வயதுடைய பாடசாலை மாணவியொருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய 14 வயதுடைய மாணவனை சந்தேகத்தின் பேரில் குருந்துவத்தை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இருவரும் குருந்துவத்தை கரகல பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்ட மாணவி ஏற்கனவே அவரது தந்தையால் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்பட்டுள்ளார் எனவும் அந்தச் சம்பவம் தொடர்பில் மாணவியின் தந்தை கைது செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையிலேயே அந்த மாணவி மீண்டும் 14 வயது மாணவனால் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# நிதி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க கடன் உத்தரவாத முகவர் நிலையம்!

## நிறுவுவதற்கு நடவடிக்கை என அமைச்சர் தகவல்



தேசிய கடன் உத்தரவாத முகவர் நிலையமொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

கடன் மறுசீரமைப்பின் பின்னர் டிசம்பர் மாதமளவில் வர்த்தகர்களுக்கு தேவையான நிதி வசதிகள் வழங்கப்படும் என அவர் கூறினார்.

இதற்கமைய, தேசிய கடன் உத்தரவாத முகவர் நிலையத்தின் ஊடாக சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்கு தேவையான நிதி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# வீரவில சிறையில் இருந்து 2 கைதிகள் தப்பியோட்டம்



வீரவில திறந்தவெளி சிறைச்சாலையில் புனர்வாழ்வளிக்கப்பட்டு வந்த கைதிகள் இருவர் தப்பிச் சென்றுள்ளனர்.

கொலன்னாவ மற்றும் களனி வனவாசல பிரதேசங்களை சேர்ந்த 27 மற்றும் 29 வயதுடைய இரு கைதிகளே தப்பிச் சென்றுள்ளனர்.

போதைப்பொருள் வைத்திருந்தனர் என அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

# வேட்புமனுக்களை ரத்துச் செய்யும் தீர்மானத்தை சட்டப் பிரிவிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை



உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காகத் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களை இரத்து செய்ய அமைச்சு சார் ஆலோசனைக் குழு மேற்கொண்ட தீர்மானத்தை சட்டப்பிரிவிற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சட்டப்பிரிவின் ஆலோசனைகளைப் பெற்ற பின்னர் இந்தத் தீர்மானம் அமைச்சரவையில் முன்வைக்கப்படவுள்ளது என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் விசேட ஏற்பாடுகள் சட்டமூலமொன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய தேவை காணப்படுகிறது என இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் மாத்திரமே அது சட்டமாக்கப்பட்டு வேட்புமனுக்களை இரத்து செய்ய முடியும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர மேலும் தெரிவித்துள்ளார்.

# பெந்தோட்டையில் சுற்றுலாப் பயணிகளிடம் பணத்தைக் கொள்ளையிட்ட இருவர் கைது!



இரு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடம் இருந்து பணத்தை கொள்ளையிட்ட இருவர் பெந்தோட்டையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெந்தோட்டையிலுள்ள ஹோட்டலொன்றில் வாடகைக்கு தங்கியிருந்த இரு வெளிநாட்டுப் பிரஜைகளையும் விகாரையொன்றை காண்பிப்பதற்காக சந்தேகநபர்கள் அழைத்துச் சென்றுள்ளனர்.

தோணியில் அழைத்துச்செல்வதற்கான பணத்தை வழங்குமாறு தெரிவித்தபோது, இரு தரப்பினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, சந்தேகநபர்கள் குறித்த இருவரையும் அச்சுறுத்தி அவர்களிடமிருந்து 10 ஆயிரம் ரூபா பணத்தை கொள்ளையிட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், சுற்றுலாப் பயணிகள் இருவரும் தங்கியிருந்த ஹோட்டலின் முகாமையாளர் செய்த முறைப்பாட்டிற்கமைய, சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழக பழைய மாணவக் கிரிக்கெட்:

# சம்பியனானது மெல்பேர்ண் சலஞ்சர்ஸ்



( எம்.என்.எம்.அப்ராஸ்)

கத்தார் வாழ் ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழக பழைய மாணவர்களால் நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில மெல்பேர்ண் சலஞ்சர்ஸ் அணி சம்பியனானது.

கத்தாரில் வாழும் ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் பழைய மாணவர்களால் வருடந்தோரும் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்படும் கிரிக்கெட் தொடர் இம்முறையும் நடைபெற்றது.

சுமார் 60க்கு மேற்பட்ட பழைய மாணவர்கள் கலந்துகொண்ட இத்தொடரில், விடுதி அறைகளின் பெயர்களை மையமாகக் கொண்டு ஆறு அணிகளாகப் பிரிக்கப்பட்டு இப்போட்டி நடத்தப்பட்டது.

இக்கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி கத்தார் பேர்லிங்க் சீசன் சர்வதேச பாடசாலையில் கடந்த வியாழக்கிழமை (21) நடைபெற்றது.

இதில் மெல்பேர்ண் சலஞ்சர்ஸ் அணி, போஸ் ரூம் புல்லட்ஸ் அணியுடன் மோதியது.

முதலில் துடுப்பாடிய போஸ் ரூம் புல்லட்ஸ் அணி, நிர்ணிக்கப்பட்ட 5 ஓவர்கள் முடிவில் 6 விக்கட்டுக்களை இழந்து 60 ஓட்டங்களைச் சேர்த்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மெல்பேர்ண் சலஞ்சர்ஸ் அணி, 4.4ஒவர்களில் இரண்டு விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்து வெற்றிபெற்று சம்பியனானது.

இத் தொடரின் நாயகனாக போஸ் ரூம் புல்லட்ஸ் அணியின் எம்.அய்யாஸ் தெரிவு செய்யப்பட்டார். இறுதி ஆட்டத்தின் நாயகனாக மெல்பேர்ண் சலஞ்சர்ஸ் அணியின் எம்.சர்ராஜ் தெரிவு செய்யப்பட்டார்.



# லைஸியம் சர்வதேச பாடசாலையின் இல்ல நீச்சல் சம்பியன்ஷிப் போட்டி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கம்பஹா, லைஸியம் சர்வதேச பாடசாலையின் இல்லங்களுக்கிடையிலான நீச்சல் சம்பியன்ஷிப் போட்டி பாடசாலை நீச்சல் தடாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில், முன்னாள் தேசிய நீச்சல் வீரர் கலாநிதி கௌஸல் மானவடு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் சிக்னஸ் இல்லம் 965 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், உரஸ இல்லம் 912 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், செட்ரஸ் இல்லம் 840 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும், அகியூலா இல்லம் 662 புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்தையும் பெற்றன.





# இன்றைய ராசி பலன்கள் - 24.09.2023




இன்று அவ்வளவு எளிதாக எதையும் பெற முடியாது. எனவே கவனமாகவும் உறுதியாகவும் செயல் பட வேண்டிய நாள்.

பணியைப் பொறுத்தவரை இன்று பலன் தரும் நாளாக இருக்காது. இன்று கூடுதல் பணிகள் காணப்படும். என்றாலும் நீங்கள் நீங்கள் முறையான திட்டமிடல் மூலம் பணிகளை கையாள்வீர்கள்.

உங்கள் தாயுடனான கருத்து வேறுபாடு வீட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும். நீங்கள் சூழ்நிலையை பக்குவமாக கையாள வேண்டும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. உங்கள் ஒவ்வொரு பணத்தையும் கவனமாக செலவு செய்ய வேண்டும்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.




இன்று பாதுகாப்பின்மை உணர்வு நிரம்பி காணப்படும். எனவே எந்த விஷயத்தையும் நீங்கள் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

பணியிடத்தில் அதிக பொறுப்புகள் காணப்படும். பணியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இது உங்கள் ஆர்வத்தை மேம்படுத்த உதவும்.

நீங்கள் உங்கள் உறவில் உள்ள பிரச்சினையை தீர்ப்பதில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் துணையிடம் இது பற்றி பேசுவீர்கள்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு குறைவு. உங்கள் செலவுகளை கண்காணிக்கவும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று நீங்கள் மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் காணப்படுவீர்கள். பணிகளை எளிதாக முடிப்பீர்கள். உங்களின் நட்பு பட்டியலில் கூடுதல் நண்பர்கள் இடம் பெறுவார்கள்.

உங்கள் பணியில் முன்னேற்றம் காண்பீர்கள். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் தொடர்பாடல் திறன் உங்கள் துணையை மகிழ்விக்கும். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை மேம்படுத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் இன்று உங்களுக்கு பண வரவு காணப்படும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சிறப்பாக வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் திறமைகளை நிரூபிக்கும் வாய்ப்பு கிடைக்கும். உங்கள் அணுகுமுறையில் நம்பிக்கை காணப்படும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் திறமையை பயன்படுத்தி நன்மை அடைவீர்கள் மற்றும் இலக்குகளை குறித்தநேரத்தில் அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் சிறப்பாக நேரத்தை செலவிடுவீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு சென்று மகிழும் வாய்ப்பு உள்ளது.

சிறு கடன் வகையில் இன்று பண வரவு ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள போதிய அளவு பணம் காணப்படும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியம் மற்றும் திடகாத்திரம் பராமரிப்பீர்கள்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண போராட வேண்டும். தியானம் அல்லது யோகா பயிலவ்தன் மூலம் பதட்டத்தை சமாளிக்கலாம்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும்.பதட்டத்தை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் தவறு காண்பீர்கள். இதனால் விரோதம் விளையும். இதனை சமாளிக்க முயல வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. உங்கள் நிதிநிலையை சமாளிக்க நீங்கள் கண்டிப்பான திட்டம் மேற்கொள்ள வேண்டும்.

சளி மற்றும் தலை வலி காரணமாக உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.




எதிர்மறை எண்ணங்கள் உங்கள் நம்பிக்கையை குலைக்கும். நீங்கள் நம்பிக்கை உணர்வை மேற்கொள்ள வேண்டும்.

மந்தமான சூழ்நிலை காணப்படும். உங்கள் செயல்திறன் மூலம் இந்த நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக்கொள்ளலாம்.

உங்கள் துணையின் நடத்தை உங்களை உணர்சிவசப்பட வைக்கும். இது குடும்ப சூழ்நிலையின் மகிழ்ச்சியை குறைக்கும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். அது மகிழ்ச்சிகரமாக இருக்கது. உங்கள் செலவுகளை கண்காணிக்க வேண்டும். நிதிநிலையில் ஏற்றத்தாழ்வுகளை சந்திப்பீர்கள்.

பதட்டமும் பேரார்வமும் ஆரோக்கியத்திற்கு உகந்ததல்ல.இத்தகைய உணர்வுகளை சமாளியுங்கள்.




நீங்கள் விரைந்து பணிகளை முடிப்பீர்கள். உங்கள் தன்னம்பிகையை வளர்த்துக் கொள்வீர்கள்.

உங்கள் பணியில் அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள். அதிக வாய்ப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உறவுமுறையில் உற்சாகம் காணப்படும். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சமூகமாக இருக்கும். இன்று அதிக பண வரவு காணும் நிலையில் இருப்பீர்கள்.

ஆரோக்கியத்தில் எந்த விதமான பெரிய பிரச்சினையும் இருக்காது.




உங்கள் செயல்களை கண்காணிக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் போராட வேண்டும். சூழ்நிலையை பொறுமையுடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

சக பணியாளர்களுடன் பயணம் மேற்கொள்வீர்கள். உங்கள் கீழ் பணி புரிபவர்களிடம் கவனமாக இருங்கள்.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் நடத்த வாய்ப்புள்ளது. உங்கள் இருவரிடமும் நல்ல புரிந்துணர்வு இல்லாததே இதற்கு காரணம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. நீங்கள் அதிகம் செலவு செய்வீர்கள். இதனால் பணப் பிரச்சினை உருவாகும்.

பதட்டம் காரணமாக தலை வலி ஏற்படும். தியானம் மூலம் ஆறுதல் பெறலாம்.

# இன்றைய ராசி பலன்கள் -24.09.2023




இன்றைய நாள் உங்களுக்கு உகந்த நாளாக இருக்காது.இன்றைய நாள் சுமூகமாக இருக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணியிடத்தில் கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க வேண்டியிருக்கும். உங்கள் பணிகளை திறமையான முறையில் ஆற்ற நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

அகந்தைப் போக்கு காரணமாக உறவில் இணக்கமின்மை காணப்படும்.எனவே இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.

தலைவலி மற்றும் முதுகுவலியால் நீங்கள் பாதிக்கப்படலாம். எனவே ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று சிந்தனை மிகுந்த நாளாக இருக்கும். எனவே உங்கள் இலக்குகளை திட்டமிட்டு மேற்கொள்வது நல்லது.

இன்று பணியிடத்தில் மிதமான பலன்களே கிடைக்கும்.நீங்கள் பணியில் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். இத்தை-கய உணர்வை தவிர்த்தல் நல்லது.

நிதி வளர்ச்சி சுமூகமாக இருக்காது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள இன்று பணப்பற்றாக்குறை காணப்படும்.

நீங்கள் தலை வலியால் பாதிக்கப்படலாம். ஓய்விற்கு நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அதிகமாக காணப்படும். சுய முயற்சி மூலம் உங்கள் கடின உழைப்பிற்கு பலன் பெறுவீர்கள்.

பணியில் பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் கடின உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும்.

காதலர்களிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். இதனால் இருவரும் உறவில் கடந்த கால வேறுபாடுகளை மறந்து உறவை புதுப்பிக்கலாம்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் சமயோசித புத்தி மற்றும் புத்திசாலித்தனம் மூலம் நீங்கள் நன்மை அடைவீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் முயற்சிக்கு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் அன்பாக உறவாடுவீர்கள். இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள கணிசமான தொகை உங்களிடம் காணப்படும். பங்கு வர்த்தகம் மூலம் பண வரவு காணப்படும்.

நம்பிக்கையான எண்ணம் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA

- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES 235+ CONDO PROJECTS 3500+ CONDO UNITS

KELSEY HOMES
40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA,
CGMA, MCSI (UK),
CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRALPAR JA-ELA

CENTRAL PARK
15 ACRES LARGEST
GATED HOUSING DEVELOPMENT
IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotiline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park